ராவ் பகதூர். கிருஷ்ணராவ் பான்ஸ்லே அவர்களும்,

ரு. 225

C.R. Namasivayan. 'Keidal Agam'
6. San Thome High Road.
San Thome, Madras.
16. 3. 26.

உ

வேதமயிலுந் துணை

அறிஞர் பெருந்தகையாக விளங்கும் ஐயர் அவர் தம் சமுகத்திற்கு அடியேன் செய்து கொள்ளும் விண்-
ணப்பம்.

அன்பார்ந்த ஐய,

தேவரீர் முன்பு எழுதிய இரண்டு கடிதங்களும் கிடைக்கப் பெற்றேன். தாங்கள் இட்ட கட்டளையை நிறைவேற்றிய பிறகே தங்களுக்குக் கடிதம் எழுத எண்-
ணியிருந்தேனாதலின் அவற்றிற்கு உடனே விடை எழுதினேனில்லை. அதன் பொருட்டு அடியேனை மன்-
னித்தருள்க.

சென்ற 11உ வியாழக்கிழமை 'அக்கடமிக்க வன்ஸிலில்' வித்துவான் பரீக்ஷைக்குத் தனித்தமிழ் எடுத்துக் கொள்ளலாம் என்னும் விஷயத்தை அடி-
யேன் பிரேரேபித்தேன். அதனைப் பிரம்மஸ்ரீ குப்புசு-
வாமி சாஸ்திரியார் அவர்களும் ஆமோதித்தனர். தமி-
ழர் சிலர் ஆக்ஷேபம் செய்த காலத்து, பிரம்மஸ்ரீ. நீல-
கண்ட சாஸ்திரியார் அவர்கள் என் கொள்கையை ஆதரித்துப் பேசினார். அதனால் தனித்தமிழ் வித்து-
வான் பரீக்ஷை அங்கீகாரம் பெற்றது. தமிழ்த் தெய்-
வத்தின் தண்ணருள் கிடைத்தது. இந்தச் செய்தியைத் தேவரீருக்கு மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்-
கின்றேன். மற்றைச் செய்திகளை நேரில் தெரிவித்துக் கொள்வேன்.

தணிகைப் புராணப் பிரதிகளை எடுத்துக் கோத்துத் தைத்து வைத்திருக்கின்றேன். 20உ ச-
னிக்கிழமை நேரிற் கொடுத்து வேண்டுவன கேட்-
டுக் கொள்ள எண்ணியிருக்கின்றேன்.

'போர்ட் ஆவ் ஸ்டடீஸ்மீட்டிங்' 20உ இங்கு நடைபெறும் என்னும் செய்தி தங்களுக்கு ரிஜிஸ்-
திரார் மூலமாகத் தெரிந்திருக்கும். அன்று பாட புஸ்தகம் அமைத்தல் முதலிய முக்கிய விஷயங்-
கள் பல தீர்மானம் செய்தல் வேண்டும்; தமிழ் மொழியில் சிரோமணி முதலிய பரீக்ஷைகளைப் பற்றியும் முடிவிட வேண்டும்; ஆதலின்

நகல்

பு.235 பக்.2.

தேவரீர் வருகையை எதிர்பார்க்கின்றேன்.

இங்ஙனம்

அடியேன்

கா. நமச்சிவாயன்.

நகல்

92

7

16

கா. நமச்சிவாய முதலியார்
கடிதம்.
௨. பக்கங்கள். 16. 3. 26.

G. 235

(3)